# FLORAL EMBROIDERY DESIGNS

WITH STITCH CHART AND INSTRUCTIONS

*By*

**"EMILLIE"**

*Published & Distributed by*

*The South India Mercantile Corporation*

C-65, 4th Cross, Thillainagar, Woriur P. O. Tiruchirapalli

(Copy Right Strictly Reserved)

**BOOK NO. 4**

**PRICE RE. 1**

# EMBROIDERY.

**Novel features of this book.**

1. Being bound with removable clips permitting removal and replacement of any design, tracing is facilitated.

2. Further, as the designs are so impressed that they show clearly at the back, the design can be traced at the back with a soft pencil, and this pencil drawing can be transferred to the cloth by waxing the cloth with a piece of candle, laying the design sheet with the pencil drawing touching the cloth and moving the back of a smooth tea-spoon, with a little pressure over the lines of the design.

## SOME DO'S AND DONT'S.

**Some Do's.**

1. When working a line or stem etc, stitches should be close and of uniform length.

2. For realistic work-Raised Embroidery is the best. After all the little extra thread and work involved will be amply repaid by the beauty of the finished product.

3. For Scallops and Borders-Button-Hole stitches are by far the best, distinctly better looking and more durable while involving practically no greater labour. With Raised Embroidery, it makes beautiful combination.

4. While working a big design, try to introduce as many suitable stitches as possible so as to relieve monotony.

5. For quick work, Chain stitch is suitable but it requires an experienced hand.

6. Couching and Applique work are capable of producing good work, but their possibilities have not been fully explored. It is easy and quick work, and with imagination you can find profitable use of odd bits of thread and cloth. Even the tailor's rags will give you inexpensive selections for Applique work.

7. Use a needle just a bit bigger than the thread. See that the thread fills up the hole made by the needle.

**Some Dont's.**

1. When working, do not draw the thread too tight, especially when the cloth is thin, for either the cloth will pucker or the needle hole will be widened. This precaution is especially necessary in Chain stitch.

2. In Satin stitch and Stem stitches, do not let the cloth show through. Lay the stitches close and parallel without overlap.

3. In Raised Embroidery, do not let the inner stitches show through any where.

4. In Applique work, do not let the joint between the two clothes to be visible anywhere.

5. Do not attempt the fine points of the design with a thick thread.

6. Do not forget to iron out the finished work. Lightly lay the embroi-

The stitches illustrated are ordinary stitches well known and the direction and course of the stitches are also clearly shown. But for the benefit of those who may require some explanation, the following brief notes are added.

1. **Run Stitch** – The needle and thread pass straight through the cloth up and down at regular intervals.

2. **Back Stitch** – The needle and thread pass down at 1, out at 2, again down at 1, and out at 3, again down at 2.

3. **Simple Stitch** – In the illustration all stitches radiate from the centre-down at 1, up again at centre, down at 2, and so on.

4. **Twining Creeper** – Intertwine a contrasting thread in a row of back stitches by passing the thread *outward* through every stitch, without piercing the cloth.

5. **Satin Stitch** – Simple stitches laid close and parallel to each other so as to produce a satin finish.

6. **Long and Short Stitch** – Self explanatory – up at 1, down at 2, up at 3 down at 4 and so on

7. **Stem Stitch** – A row of small simple stitches laid slantingly across the line of the design.

8. **Cross Stitch** – By simple stitches the lines slanting to right are finished from left to right-up at 1, down at 4, up at 3, down at 6, and so on and then the cross stitches are laid across from right to left. Note the needle which went down at 10, is brought up at 9, goes down at 8 and comes up at 7.

9. **Chain Stitch** – The needle come up at 1, lays a loop of thread on the cloth, which is held down by the left thumb, goes down again at 1, and comes at 2, *over* the loop thread and tightened. The last loop is fixed to cloth by a back stitch.

10. **Button-Hole Stitch** – For beauty of execution, the stitches should be of uniform length. So it is advisible when working scallops, leaves etc, to mark in pencil an inner curved line. For borders mark out the upper and lower lines, which should be exactly parallel. The needle comes up at 1, a loop is made, goes down at 2, comes up again a little to the left of 1, over the loop thread and is tightened.


11. **Ordinary Knot Stitch** – Just like a chain stitch with this difference that the needle is brought up again at 2, which is very close to where it first came up i.e. 1.

12. **Couching** – Bring up a thick thread above the cloth, lay it on the cloth and fasten the other end down by taking it down the cloth. Now fasten this thread to the cloth by a thinner thread of contrasting colour by various artistic stitches. Instead of one thread, two; three or more threads may be laid parallel and fastened with artistic stitches at regular intervals. Some suggestions are given in the illustrations.

13. **Raised Embroidery** – As already stated, a necessity for first class work. Points to note here are that the inner stitches should be close, but a bare margin along edges should be left. The over cast stitches should be of the same colour as the inner stitches and lie across the inner stitches very close but not over lapping.


14. **Applique Work** – Cut of a fine coloured cloth, cut clean shapes like leaves, petals etc, and laying this on the cloth in the right place, fasten it to the cloth by close simple stitches all around. Then work the veins with back stitches with thread of a colour slightly darker than the Applique cloth.

15. **French Knot** – Bring the needle above the cloth, wind up the thread round the needle twice or thrice and holding the twisted thread lightly with the left hand, draw the needle through the twists and fasten the knot thus made to the cloth by passing the needle under the cloth quite near the knot. Care is necessary, when drawing the needle through the twists, as the needle may get stuck up in the twists.





Finished Stitch.






Finished Stitch.







## 2. Back Stitch.





## 7. Long & Short Stitch.




## 12. Couching.

Ordinary.




(Different Types)

Three Stitches.



Cross Stitch.




Button Hole Stitch.




Three Threads.

Red
Green
Red




## 3. Simple Stitch.





Finished Stitch.

Above Below



the cloth the cloth.

## 8. Cross Stitch.




Finished Stitch.



## 13. Raised Embroidery.




Leaf Scallop


Straight Stitch.




Slanting Stitch.




Button Hole Stitch.




## 4. Twining Creeper.





## 9. Chain Stitch.





Finished Stitch,




## 14. Finished Stitch,





## 5. Satin Stitch.




## 10. Button Hole Stitch.




## 15. French Knot.



# சித்திரத் தையல்.

## இப்புத்தகத்தின் புதிய அம்சங்கள் :

1. காப்பி செய்யவேண்டிய டிசைன்களை சுலபமாக எடுக்கவும், மறுபடியும் கோர்த்து வைக்கவும் அனுகூலமாக கிளிப்புகள் போடப்பட்டிருக்கின்றன.

2. மேலும் டிசைனின் கோடுகள் பின்புறம் தெளிவாகத் தெரியும்படி செய்திருப்பதால், பின்புறத்தில் மெதுவான பென்சிலால் டிசைனை எழுதி, துணியை மெழுகு வர்த்தியால் பிசு பிசுவென்றாகும்படி தேய்த்து, பென்சிலால் எழுதியது துணியில் படியும்படி வைத்து, கையால் தடவி சமப்படுத்தி, ஒரு வழவழப்பான கரண்டியின் பின்புறத்தால் கொஞ்சம் அழுத்தி டிசைன் கோடுகளின் மேல் இழுத்துக் கொண்டு போனால், பென்சிலால் எழுதிய கோடுகள் துணியில் ஒட்டிக்கொள்ளும்.

## முக்கியமாக செய்ய வேண்டியதும், செய்ய வேண்டாததும்.

### செய்ய வேண்டியன :

1. ஒரு கோடு அல்லது கிளை போடும்பொழுது, தையல்கள் நெருக்கமாகவும், ஒரே நீளமாகவும் இருக்கவேண்டும்.

2. நிசமான உருவம்போல் தையல் போடுவதற்கு, எடுப்பான தையல்தான் சிறந்தது. நூல் செலவும் சிரமமும் கொஞ்சம் அதிகப்பட்டாலும் தையல் மிக அழகாயிருக்கும்.

3. வளைந்த ஓரங்களுக்கும் (Scallops), நேரான ஓரங்களுக்கும் (Borders), பித்தான் துவாரத் தையலே அதிக அழகாகவும், உறுதியாகவும் இருக்கும். அதிக கஷ்டமுமில்லை. எடுப்பான தையல்கள் மேல் இத் தையல்களைப் போட்டால் இன்னும் அழகாயிருக்கும்.

4. பெரிய டிசைனை போடும் பொழுது பலவித ஏற்ற தையல்களை உபயோகித்தால் ஒரே மாதிரி இல்லாமல் அழகாயிருக்கும்.

5. சீக்கிரம் தையலை முடிப்பதற்கு, சங்கிலி தையல் ஏற்றது. ஆனால் கொஞ்சம் பழக்கம் வேண்டும்.

6. கௌசிங்கினாலும் (Couching) அப்ளிக்வேலை (Applique) யினாலும் பலவித அழகிய படங்கள் போடலாம். ஆனால் எக்காரணத்தினாலோ ஜனங்கள் அதிகமாய் இவைகளை கையாடுவதில்லை. இவை சுலபமானதும், சீக்கிரத்தில் முடியக்கூடியதுமானவை. கொஞ்சம் யோஜனையுடன் செய்தால் சிறிய துண்டு நூல்களையும், துண்டு துணிகளையும் பலவிதமாய் பிரயோஜனப்படுத்தலாம். அப்ளிக் வேலைகளுக்கு தையல்காரர் வெட்டிப் போட்ட துண்டு துணிகளில் பல பிரயோசனப்படும்.

7. ஊசி நூலைவிட கொஞ்சம் மொத்தமாக இருக்கவேண்டும். ஊசியால் உண்டான துவாரத்தை நூல் சரியாக மூடும்படி இருக்கவேண்டும்.

### செய்ய வேண்டாதவை :

1. தையல் போடும்பொழுது நூலை அதிகமாய் இழுக்கக்கூடாது. அதுவும் மெல்லிய துணியாயிருந்தால் அதிக ஜாக்கிரதை வேண்டும். ஏனென்றால் துணி சுருங்கிவிடும். அல்லது ஊசியின் துவாரம் பெருத்துவிடும். இது சங்கிலித் தையல் போடும் பொழுது முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. சாடின் தையலும், கிளைத் தையலும் போடும்பொழுது, அடியில் துணி தெரியாதபடி நெருக்கமாகவும், ஒன்றின்மேல் ஒன்று குறுக்கிடாமல் தையல்கள் இணையாகவும் இருக்க வேண்டும்.

3. எடுப்பான தையல் போடும்பொழுது உள்ளிருக்கும் நூல் தெரியாமல் தையல்களால் மூட வேண்டும்.

4. அப்ளிக் வேலையில் துணிகள் சேருமிடம் கொஞ்சம்கூட தெரியாமல் சேர்க்கும் தையல் நெருக்கிப் போடவேண்டும்.

5. டிசைனில் கூர் முனைகள் இருக்குமிடத்தில் மொத்த நூலை உபயோகிக்கக்கூடாது.

6. தையல்கள் முடிந்தவுடன் ஸ்திரி (Ironing) போட மறக்கக்கூடாது. ஒரு மழ மழப்பான சம இடத்தில் தையல் கீழ்புறம் இருக்கும்படி துணியை வைத்து, துணியை கொஞ்சம் நனைத்தாவது அல்லது ஒரு மெல்லிய ஈர துணியை மேல் வைத்து அதிகம் அழுத்தாது ஸ்திரி போட வேண்டும். இப்படிச் செய்வதால் தையலின் அழகு மிகவும் அதிகரிக்கும்.

துணிக்கு மேலும் கீழும் போவதை படிப்படியாக காண்பித்திருக்கிறது. இருந்தாலும் சில பேருக்கு தெளிவாக விளங்குமாறு கொஞ்சம் விபரமாக பின்னால் எழுதப்பட்டிருக்கிறது.

1. **Run Stitch : கோக்கு தையல்.** துணியின் மேலும் கீழும் சம தூரங்களில் மாறி மாறி செல்லும்.

2. **Back Stitch : கெட்டித் தையல்.** ஊசி 1-ல் கீழும், 2-ல் மேலும், மறுபடியும் ஒன்றில் கீழும், 3-ல் மேலும், மறுபடியும் 2-ல் கீழும் போகும்.

3. **Simple Stitch : சாதாரண தையல்.** படத்தில் எல்லாத் தையல்களும் நடுவில் ஆரம்பித்திருக்கின்றன. நடுவில் மேல் வந்து, 1-ல் கீழ், மறுபடியும் மத்தியில் மேல், 2-ல் கீழ் இவ்விதம் போகும்.

4. **Twining Creeper : பின்னும் கொடி.** கெட்டித் தையல்களை ஒரு வரிசைப் போட்டு, முதல் தையல் கீழ் துணியை குத்தாமல் ஊசியை வெளிப்புறம் செலுத்தி, கிட்ட இழுத்து அடுத்த தையலின் கீழ் வெளிப்புறம் செலுத்தி இவ்விதம் முடிப்பது.

5. **Satin Stitch : சாடின் தையல்.** இது சாதாரண தையல்களை நெருக்கி இணைத்து போடுவது.

6. **Stem Stitch : கிளை தையல்.** டிசைனில் கிளையின் கோட்டை கொஞ்சம் சாய்ந்து குறுக்கிடும்படி மிகச் சிறிய ஒரே நீளமான சாதாரண தையல்களை நெருக்கிப் போட்டு ஒரு கிளை போல் செய்வது.

7. **Long & Short Stitch : நீளமும், குட்டையுமான தையல்.** படத்தில் 1-ல் மேல் வந்து 2-ல் கீழும் 3-ல் மேலும் 4-ல் கீழும் இவ்விதமாக போகும்.

8. **Cross Stitch : குறுக்கு தையல்.** 1-ல் மேலும், 4-ல் கீழும், 3-ல் மேலும், 6-ல் கீழும் இவ்விதம் வலதுபுறம் சாய்ந்த தையல்களை முடித்து பின்பு குறுக்கு தையல்களைப் போடவேண்டும். தையல் திரும்பும் இடத்தில் 10-ல் கீழ் சென்ற ஊசி 9-ல் மேல் வந்து 8-ல் கீழ் சென்று 7-ல் மேல் வருவதை கவனிக்கவும்.

9. **Chain Stitch : சங்கிலி தையல்.** ஊசியை 1-ன் மேல் கொண்டுவந்து நூலை ஒரு வளையமாக துணிமேல் வைத்து, அவ்வளையத்தை இடது பெருவிரலால் அழுத்திக் கொண்டு, மறுபடியும் 1-ன் கீழே செலுத்தி 2-ன் மேல்கொண்டு வரும்பொழுது வளைய நூலுக்குமேல் கொண்டு வந்து ஊசியை இழுத்தால் ஒரு வளையம் உண்டாகும். இவ்விதம் மற்ற வளையங்களைப் போட்டு கடைசி வளையத்தை நுனியில் ஒரு கெட்டித் தையல் போட்டு நகராமல் செய்யவும்.

10. **Button hole Stitch : பித்தான் துவார தையல்.** இத் தையல்கள் ஒரே நீளமாக இருக்கவேண்டுமாதலால், இது போடும் பொழுது தையல் எவ்வளவு தூரம் இருக்க வேண்டுமோ அந்த இடத்தில் பென்சிலால் கோடு போட்டுக்கொள்ள வேண்டும். 1-ல் ஊசி மேல் வந்து நூலை துணிமேல் சிறு வளையமாக வைத்து, 2-ல் கீழ் சென்று மறுபடியும் 1-க்கு கொஞ்சம் இடது பாகத்தில் மேல்வந்து இழுத்தால் நூல்கள் பின்னிக்கொண்டு தையல் விழும்.

11. **Ordinary Knot Stitch : சாதாரண முடிச்சு தையல்.** இது சங்கிலி தையல் போல் தான். ஆனால் முதலில் மேல் வந்த இடமான 1-க்கு மிகவும் அருகிலேயே 2-ல் மறுபடி வெளிவரும்.


12. **Couching : கௌசிங்.** ஒரு மொத்த அழகிய வர்ணமுள்ள நூலை மேல் கொண்டு வந்து, துணிமேல் நீட்டிப் போட்டு முடிவில் நூலை துணியின் உட்புறம் செலுத்தி கெட்டிப்படுத்தி, வேறு வர்ண மெல்லிய நூலால் இந்த மொத்த நூலை பலவித அழகிய தையல்களால் துணியுடன் சேர்த்து விட வேண்டும்.


13. **Raised Embroidery : எடுப்பானதையல்.** முன்னால் சொன்ன பிரகாரம் உயர்ந்த வேலைக்கு இது இன்றியமையாதது. இதில் சில விஷயங்கள் கவனிக்கவேண்டும். உள் தையல்கள் நெருங்கி சமமாக இருக்க வேண்டும். ஓரங்களில் உள் தையல் போடக்கூடாது. மேலே போடும் தையல் நூல் கீழ் தையல் நூல் நிறத்தில்தான் இருக்கவேண்டும். மேல் தையல் கீழ் தையலுக்கு குறுக்கிட்டு நெருங்கி கீழ் தையல் தெரியாதபடி இருக்கவேண்டும்.


14. **Applique work : அப்ளிக் வேலை.** அழகிய வர்ணத்துணியை கூரான கத்தரிக் கோலால் வெட்டி, துணியின்மேல் சரியான இடத்தில் வைத்து, சாதாரண தையலால் சுற்றி கீழ் துணியுடன் சேர்த்து சேர்த்த இடம் தெரியாமல் நெருங்கிய தையல்கள் போடவும். பின்பு இலையின் நரம்புகளை மேல் துணியின் வர்ணத்தைவிட கொஞ்சம் கறுத்த வர்ண நூலால் கெட்டி தையல்களால் போடவும்.

15. **French knot : பிரஞ்சு முடிச்சு தையல்.** முடிச்சு போடவேண்டிய இடத்தில் துணிக்கு மேல் ஊசியைக் கொண்டு வந்து, நூலை ஊசியைச் சுற்றிலும் இரண்டு மூன்று தடவை மேலாக சுற்றி இடது கை விரல்களால் மேலாக பிடித்துக் கொண்டு ஊசியை சுற்றுக்களின் இடையே ஜாக்கிரதையாக


# PAGE No. I.




















GOOD MORNING.

